**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, AVINASHI.**

Judicial form No.53
(See Rule 42)

DEPOSITION OF WITNESS

**Calendar Case No.175 of 2024**

**Prosecution Witness**:PW4

| Name | ஜெகநாதன்(PW4) | Caste | |
|---|---|---|---|
| Father Name | வெள்ளியங்கிரி | Calling | காவல் ஆய்வாளர் |
| Village | | Religion | |
| Taluk | | Age | 44 |
| District | கோவை | | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the **13th day of August 2026** by Thiru. Kulandaivel, Magistrate Clerk, JM Court, Avinashi by following the direction of Officer of this Court.

*(Accused Present)*

**முதல் விசாரணை(அரசு தரப்பு):-**

நான் தற்போது கோவை மாநகர நுண்ணறிவு பிரிவில் ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். நான் கடந்த 2023 ஆம் வருடம் திருமுருகன்பூண்டி காவல் நிலையத்தில் ஆய்வாளராக பணிபுரிந்த சமயத்தில் கடந்த 18.05.2023 ஆம் தேதி நிலைய தலைமை காவலர் மோகன் என்பவர் நிலைய அலுவலர் இருந்தபோது சகுந்தலா என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த எழுத்து மூலமாக புகாரை பெற்று நிலையை குற்ற எண் 398/2023 சட்ட பிரிவுகள் 279,304(A) of IPC யின் கீழ் ஒரு முதல் தகவல் அறிக்கையை பதிவு செய்து வழக்கினை உதவி ஆய்வாளர் முருகேசன் அவர்களின் புலன் விசாரணைக்கு வைத்தார்.**அந்த முதல் அறிக்கை (அ.சா.ஆ.3) ஆக குறியீடு செய்யப்படுகிறது**.

உதவி ஆய்வாளர் முருகேசன் இந்த வழக்கினை புலன்விசாரணைக்கு எடுத்துக்கொண்டு அன்றைய தினமே மாலை 6.00 மணிக்கு சம்பவ இடம் சென்று சாட்சிகள் ஜீவானந்தம், சாந்தி ஆகியோர் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு மாதிரி வரைபடம், பார்வை மகஜர் தயார் செய்துள்ளார்.**அந்த மாதிரி வரைபடம் (அ.சா.ஆ.4) ஆக குறியீடு செய்யப்படுகிறது.** சாட்சிகள் சகுந்தலா, பூபதி, ஜீவானந்தம், சாந்தி ஆகியோர்களை விசாரித்து வாக்குமூலங்கள் பதிவு செய்துள்ளார்.

இறந்து போன மோகன் என்பவரது பிரேதத்தின் மீது திருப்பூர் அரசு மருத்துவமனை சபக்கிடங்கின் முன்பு வைத்து 19.05.2023 ஆம் தேதி காலை 8.00 மணி முதல் 10.00 மணி வரை சாட்சிகள் மற்றும் பஞ்சாயத்தார் முன்னிலையில் பிரேத விசாரணை செய்து பிரேத விசாரணை அறிக்கை தயார் செய்துள்ளார். பிரேத விசாரணை சாட்சிகளை விசாரித்து வாக்குமூலங்கள் பதிவு செய்துள்ளார். **அந்த பிரேத விசாரணை அறிக்கை (அ.சா.ஆ.5) ஆக குறியீடு செய்யப்படுகிறது.** பிரேதத்தை பிரேத பரிசோதனைக்கு அனுப்பி வைத்துள்ளார்.

பின் இவ்வழக்கை நான் புலன்விசாரணைக்கு எடுத்துக் கொண்டு 05.06.2023 ம் தேதி நிலையம் ஆஜரான எதிரியை கைது செய்து பிணையில் விடுவித்தேன். விபத்தில் சம்பந்தப்பட்ட வாகனத்தை மோட்டார் வாகன ஆய்விற்கு அனுப்பி வைத்தேன். 15.06.2023 ஆம் தேதி மோட்டார் வாகன ஆய்வாளர் வேலுமணி என்பவரை விசாரித்து TN 39 CM 4821 பதிவு எண் கொண்ட இருசக்கர வாகனத்திற்கான மோட்டார் வாகன ஆய்வு அறிக்கை பெற்று வாக்குமூலம் பதிவு செய்தேன். **அந்த மோட்டார் வாகன ஆய்வறிக்கை (அ.சா.ஆ.6) ஆக குறியீடு செய்யப்படுகிறது**, அன்றைய தினமே விபத்தில் இறந்து போன மோகன் என்பவரது பிரேதத்தை பிரேத பரிசோதனை செய்த மருத்துவர் பிரவீன்குமார் என்பவரை விசாரித்து பிரேத பரிசோதனை அறிக்கை பெற்று வாக்குமூலம் பதிவு செய்தேன். **அந்த பிரேத பரிசோதனை அறிக்கை (அ.சா.ஆ.7) ஆக குறியீடு செய்யப்படுகிறது** அன்றைய தினமே இவ்வழக்கில் எனது புலன்விசாரணை முடித்து எதிரி மீது குற்ற அறிக்கை தாக்கல் செய்தேன்.

<u>குறுக்கு விசாரணை (எதிரி தரப்பு)</u>

சொன்ன நேரத்தில் சொன்ன முறையில் புகார் தரப்படவில்லை என்றும் முதல் தகவல் அறிக்கையும் பதிவு செய்யப்படவில்லை என்றால் சரியல்ல. இந்த வழக்கில் விசாரிக்கப்பட்ட சாட்சிகள் அனைவரும் இறந்துபோன நபர்களின் உறவினர்கள் என்றால் உறவினர்கள் மற்றும் கண்ணுற்ற சாட்சிகளை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். இந்த விபத்தானது நபரின் வயது மூப்பு மற்றும் கவனக்குறைவால் ஏற்பட்டது என்றால் சரியல்ல. சொன்ன நேரத்தில் சொன்ன முறையில் சாட்சிகள் விசாரிக்கப்படவில்லை என்றும் குற்ற அறிக்கை பதிவு செய்யப்படவும் இல்லை என்றால் சரியல்ல. இவ்வழக்கை நான் சரிவர புலன் விசாரணை செய்யாமல் விபத்து நஷ்ட ஈடு பெறுவதற்காக பதிவு செய்யப்பட்ட வழக்கு

என்றால் சரியல்ல. எதிரிக்கும் இந்த வழக்கு விபத்திற்கும் சம்மந்தம் இல்லை என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை:—** இல்லை.

| | |
|---|---|
| சாட்சியின் கையொப்பம் | திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல, என்னால் தட்டச்சருக்குச் சொல்லப்பட்டு, அவரால் திறந்த நீதிமன்றத்தில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு, சாட்சியால் சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டு என் முன்னால் சாட்சியின் கையெழுத்து / கைரேகை பெறப்பட்டது.<br><br>(Sd.) N.Keerthana<br>குற்றவியல் நீதித்துறை நடுவர், அவிநாசி. |